செ.வெ.எண்: 44 நாள்:23.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் கருவூலத்தின் வழியாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்கள் தங்களது ஓய்வூதியம் மூலம் பெற்ற ஆண்டு வருமானத்துடன் இதரவகை வருமானத்தையும் சேர்த்து ரூ.2,50,000/-க்கு மேற்பட்டவர்கள் 2017-2018ம் நிதியாண்டிற்கான வருமானவரி அறிக்கையினை ஓய்வூதியம் பெற்று வருகின்ற மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்களில் 31.01.2018ம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஓய்வூதியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் மார்ச் 2017 முதல் டிசம்பர் 2017 வரை உள்ள காலத்தில் ஓய்வூதியம் எவ்வளவு பெறப்பட்டது என்பதை அறிவதற்கு tn.gov.karuvoolam.in என்ற இணையதளத்தில் ECS status of pensioners என்ற பக்கத்தில் தெரிந்து கொள்ளலாம். இதற்காக கருவூலம் சென்று ஓய்வூதிய விபரங்களை பெற வேண்டியதில்லை எனவும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை கருவூல அலுவலர் திரு.இ.மூக்கையா அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**